Kavignan

# கவி ஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

**இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு**



**இதழ்-004 * ஆனித் திங்கள் 2010**

அறிமுக விலை ரூபா-20.00

# Kavignan கவி ஞன்

வணக்கம்,

மீண்டும் ஒருமுறை நன்றி. எதிர்காலக் கவிஞர்களுக்கு நிகழ்காலக் "கவிஞன்" மூலமாய் இறந்தகாலக் கவிஞர்களால் கூறப்பட்ட கருத்துக்கள் வழங்குவதில் பெருமகிழ்ச்சி.

ஈழத்துக் கவிஞர்கள் எத்தனைபேர் இருந்தாலும் முத்தான ஒரு கவிஞன் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களைக் குறிப்பிடலாம்.

நான் செல்வதை விட கவி பற்றி அவரே கூறுகின்றார் கேளுங்கள்...

"கவி இயற்கையானது
கல்வியறிவால் அதை
வளம்பெறச் செய்யுங்கள்
வளம் பெறாத கவியூற்று
வற்றிப்போகும் ~ அது வாழாது

கவிக்கு இசை வேண்டும்
இசைக்கு ஓசை நயம் அவசியம்
ஓசைக்கு மாத்திரை முக்கியம்"

வாழும் சூழலில் ஆளும் விடயங்களை நாளும் எழுதுங்கள்! கவிஞனுக்கு. அனுப்பவேண்டிய முகவரி:

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கி.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.

'KAVIGNAN"
Co-op Road,
Puthukkudiyiruppu - 5 (E.P),
Batticaloa,
Sri Lanka.

**மின்னஞ்சல்:** kavignan@live.com

**வருடச் சந்தா ரூபா.300.00**
அனுப்பவேண்டிய தபாலகம்: புதுக்குடியிருப்பு
முகவரி: ச.மதன், கூட்டுறவுக் கடைவீதி,
புதுக்குடியிருப்பு(கீ.மா),மட்டக்களப்பு.

அன்புடன்
ஆசிரியர்

Kavignan
# கவிஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

04

25 ஆனி 2010

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்................ 03
இம்மாதப் பிரபலம்................ 04
இலக்கணக் கவிஞன்........... 06
கவிதைத்துளிகள்................. 07
கவிதைச் சமர்..................... 08
மாதம் ஒரு கீதம்.................. 09
மாணவர் மனதிலிருந்து........ 10
அன்புள்ள அப்பா.................. 11
ஏன் இந்தப் பிரமை............... 12
நடிப்புலக நாடகங்கள்............ 13
அட்டைப்படக் கவிதை........... 14
அகத்தில் அமர்ந்தவை .......... 15
மேசைக்கிறுக்கல் ................ 16
நிறைமகள் ........................ 17
வாசகரிடமிருந்து கவிஞனுக்கு... 18

## சிந்தனைக்கு...

ஒரு மாதத்தின் பெறுமதியை
குறைப்பிரசவமான ஒரு தாயிடம் கேட்டுப்பார்.
ஒரு நிமிடத்தின் பெறுமதியை
ரயிலைத் தவறவிட்ட பயணியிடம் கேட்டுப்பார்.
ஒரு வினாடியின் பெறுமதியை
விபத்தில் உயிர்தப்பியவரிடம் கேட்டுப்பார்
மில்லி செக்கனின் பெறுமதியை
ஒலிம்பிக் போட்டியில் பதக்கம்பெறத் தவறியவரிடம் கேட்டுப்பார்.
நீ வீணாக்கிய நேரங்களை உன்னை நீயே கேட்டுப்பார்.

# அறிமுகப் புதுமுகம்



**முழுப்பெயர்** : *சண்முகநாதன் மோகன்*

**முகவரி** : *கடற்கரை வீதி,*
*புதுக்குடியிருப்பு–5,*
*மட்டக்களப்பு.*

**பிறந்த திகதி** : *24–09–1982*

**பொழுதுபோக்கு:**
*பாடல்கள் கேட்டல்,*
*கவிதைகள்*

**கல்வி கற்ற பாடசாலை:**
*மட்–புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்.*

**கவிதை அனுபவம்:**
*பாடசாலைக் காலங்களில் தமிழ்த்தினப் போட்டிகளில், பாடசாலைச் சஞ்சிகைகளில் எழுதியமை*

## கல்வியின் பெருமை

கல்வியில் உயர்ந்திட்ட மனிதன்-தன்னை
காவியப் படைப்பிலே காட்டுவான் இனிதாய்
பள்ளியில் கற்றிட்ட கல்வி-இந்தப்
பாரினில் சரித்திரம் படைத்திடும் தெள்ளி

பேதமை மாற்றியே தீரும் - நல்ல
சாதனை கல்வியில் படைக்கலாம் வாரும்
போட்டிகள் கல்வியில் வேண்டும்-இது
நாட்டிலே பொறாமையை மாற்றிடத் தூண்டும்

அறிவினை ஊட்டிட வேண்டும்- என்றும்
அறியாமை இருள் தன்னை அகற்றிட யாண்டும்
கல்வியால் அறிவுதான் ஊறும்-கூடி
பழகிடப் பழகிடப் பேதமை மாறும்

கிண்டிட நீரது ஊறும்- கல்வி
கற்றிட உள்ளமே தேறும்
நாட்டிலே ஒற்றுமை ஊட்டும் -கல்வி
நல்லதோர் தன்மையை நிலை நாட்டும்

பகுத்தறி வாளனாம் என்று - உன்னை
பாட்டிலே பாடினான் பாவலன் அன்று
முகத்திலே உனக்கிரு கண்ணும்-கல்வி
அகத்திலே ஏற்றாட்டி அதுரெண்டும் புண்ணு

கல்வியில் உயர்ந்தவன் மேதை - என்று
கம்பனும் காட்டினான் நல்லொரு பாதை
பண்பிலே உயர்ந்தவன் ஆக்கும்- கல்வி
பாமரன் என்பதைப் போக்கும்.

***அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்***

# இம்மாதப் பிரபலம்

"தம்பிலுவில் ஜெகா"



"தம்பிலுவில் ஜெகா" எனும் புனைபெயரில் எழுதும் இவரின் இயற்பெயர் திருமதி.ஜெகதீஸ்வரி நாதன். தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றபோது தனது 12 வது வயதில் "அன்னை" எனும் கவிதை மூலம் கவிதையுலகில் காலடி எடுத்து வைத்த இவர், 50 வயதைக் கடந்தும் அதே இளமைத் துடிப்புடன் கவிதை உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்.

1972 முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன "சிறுவர் மலர்", "பூவும்பொட்டும்", "வாலிப வட்டம்", "ஒலிமஞ்சரி", "இளைஞர் மன்றம்" போன்ற வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிய கவிதைகள் இவரின் கவித்துவத்தைப் பறைசாற்றின.

தினகரன்,வாரமஞ்சரி, வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிக்கைகளில் இவரது 50 ற்கும் மேற்பட்ட கவிதைகள் வெளியாகியிருந்தன.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழாசிரியராக கடமையாற்றும் இவர் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் பத்திரிகைப் பொறுப்பாசிரியராக இருந்து கமலம், முத்தாரம்,செந்தாமரை போன்ற சஞ்சிகைகளையும் வெளியிட்டார். "கோகிலம்" சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் இருந்த இவரின் கவிதைகள் கோகிலம், காற்று, தூது, இந்துமதி,இதயசங்கமம், நிறைமதி போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்ததுடன் பெண் சஞ்சிகையில் தற்போதும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

பல கவியரங்குகளிலும் பங்குகொண்ட இவர் "செங்கதிர்" சஞ்சிகையின் 2008 பங்குனி சர்வதேச மகளிர் சிறப்பிதழை அலங்கரித்தார். சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய வெளியீடுகளான "கண்ணாடி முகங்கள்", "கவிதைகள் பேசட்டும்" போன்ற கவிதைத் தொகுப்புகளில் தனது கவிதைகளால் இரசிகர்களின் மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார்.

1996.10.18 இல் திருக்கோயில் பிரதேச சாகித்திய விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் இவரிக் கவித்துவத்திற்கு 1993.03.14 இல் கௌரவ ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் "கவிக்கோகிலம்" எனும் விருதும் வழங்கப்பட்டது. 1998 ல் "இன்னும் விடியவில்லை" எனும் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகள் நூலாக வெளிவந்தது.

தான் யாத்த கவிதைகளில் தனக்கு மிகவும் பிடித்த கவிதையாக "தேடுதல் வேட்டை" எனும் கவிதையை கூறுகிறார். அக் கவிதை கவிஞன் இரசிகர்களுக்காக வழங்கப்படுகின்றது.

# தேடுதல் வேட்டை

தேடுதல் வேட்டை தெருக்களிலே கூடும்
வாடும் மக்கள் நிலை வந்திங்கு பாரும்
சந்தேகப் பெயரினிலே சனத்திரள் சூழும்
எந்தக் காரணமோ எமக்கெங்கே தெரியும்

கவசங்கள் வருமொலி காதினிலே கேட்கும்
காளையர் நெஞ்சமதில் பயம் வந்து சேரும்
அவயங்கள் ஒவ்வொன்றும் ஆட்டங்கள் காணும்
அவ்விடத்தே படைவந்து அரணொன்றமைக்கும்

அடோ நில்லடா என்றோசை கேட்கும்
அறைபட்ட கன்னமதில் மின்னல் தெறிக்கும்
"கிறு கிறு" என்று தலை கரகம்போல் ஆடும்
மறுகணமே உடல் மயங்கி மண்மீது வீழும்

சந்திகள் எங்கெங்கும் சத்தமே கேட்கும்
சத்தமிட்டழும் பெண்ணை சப்பாத்து மிதிக்கும்
குந்தியே கண்மூட குருதியெலாம் உறையும்
மந்தைபோல் எமையேற்ற வாகனங்கள் சூழும்

குறிபார்த்து எமையேற்ற கூப்பிடும் நேரம்
நெறிமாறு நிலைகண்டு நெஞ்சம் படபடக்கும்
என்னவோ என்றெல்லாம் முத்திரைகள் குத்தும்
ஏறு பூசாக்கு என்றோசை கேட்கும்

"ஞானம்" கலை இலக்கியச் சஞ்சிகையில் ஆகஸ்ட்டு 2008 ல் வெளிவந்தது

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவணந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

## எழுத்தின் பெயர்

**சூத்திரம் 66**

அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே

அ,இ,உ ஆகிய மூன்று எழுத்துக்களும் சொல்லின் முதலில் நின்று சுட்டுப் பொருளைத் தருமாயின், அது சுட்டெழுத்து எனப்படும்.
அ - தூரத்திலுள்ள பொருளையும், இ - சமிபத்திலுள்ள பொருளையும் உ-இரண்டுக்கும் இடைப்பட்ட பொருளையும் சுட்டும்.
(உ-ம்) அது , இது , உது

இது அகச்சுட்டு, புறச்சுட்டு என இரு வகைப்படும். அகச்சுட்டு என்பது இம்மூன்று எழுத்துக்களும் தாமாகச்சுட்டுவது.
(உ-ம்) அது , இது , உது

புறச்சுட்டு என்பது இவை தமக்குப் புறத்தே வேறு ஒன்றைச் சுட்டுவது.
(உ-ம்) அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன்

**சூத்திரம் 67**

எ யா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏ யிரு வழியும் வினாவா கும்மே.

எ, யா ஆகிய இரு எழுத்துக்களும் சொல்லுக்கு முதலிலும், ஆ,ஓ ஆகிய இரு எழுத்துக்களும் சொல்லுக்கு இறுதியிலும், ஏ சொல்லுக்கு முதலிலும், இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | எது? | யார்? |
| | அவனா? | கள்வனோ? |
| | ஏன்? | நானே? |

# கவிதைத் துளிகள்

## தாய்

ஆயிரம் முறை
ஆலயம் தொழுதிருப்பேன்
ஒருமுறையேனும்
கடவுளைக் கண்டதில்லை
தாயே ஒருமுறையேனும் உன்பாதம்
தொழுததில்லை – ஆனால்
ஆயிரம் முறை
உன்னில் கடவுளைக் கண்டிருக்கிறேன்

## காதல் சாம்ராஜியம்

என் வாழ்வெனும் சாம்ராஜியத்தில்
ராஜாவாகவும் நீயிரு
ராணியாகவும் நீயே இரு
உன் உள்ளத்தில் ஆஜராகும் உரிமை
எனக்கு மட்டும் தந்துவிடு.

**எச்.கே.எம்.றியால்**
**மெத்தைப்பள்ளி வீதி.**
**காத்தான்குடி,**
**மட்டக்களப்பு.**

மங்கையுன் மஞ்சுடம்பை
கண்டு மதிமயங்கும்
மஞ்சன் நெஞ்சமல்ல
என்றிருந்தும்
துஞ்சுதற்கும்
அஞ்சா என்நெஞ்சம்
கெஞ்சியது ஏனோ?

**செ.சுரேன்**
**அன்னமலை.**
**கல்முனை**

மேசைக்கிறுக்கல் தான்
மேடைக் கவிஞனாக்கியது.
மேசைத் தாளந்தான்– என்னை
மேளக் கலைஞனாக்கியது.

**அ.தனோஜன்**
**திருக்கோயில்**

**அன்பான வாசகர்களே,**

"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

-நன்றி-




"வார்த்தைகள் உரசும்போது
வண்ணக் கவி உருவாகும்"

**கவிஞன்** 4 இல் குவிதைச் சமர் எனும் பகுதி ஆரம்பிக்கப்படுகிறது. இம் மாதம் "ஏமாறுபவர்கள் பெண்களே" என கொடுக்கப்பட்டுள்ள கவிதைக்கு எதிரான கவிதைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. இப்பகுதிதைச் சுவாரசியமாக்கும் பொறுப்பை கவிஞன் தனது வாசகர்களுக்கு வழங்குகின்றான்.

## ஏமாறுபவர்கள் பெண்களே!

கருவினிலே சுமந்து
கன்னி வரை வளர்த்து
உருவாக்கிய தாயை
உதறித் தள்ளிவிட்டு
ஒருசிலநாள் பழகிய
ஒருவன் யாருடனோ
திருட்டுக் காதல்செய்து
திசைகெட்ட கதைகள் உள
இச்சைகள் தோன்றும்
இளமைப் பருவத்தை
எச்சரிக்கை செய்யாது
எங்கோ அலையவிடும்
மங்கையர் பலர்இங்கு
மாயக்காதலினால்
சங்கை குறைந்து வாழும்
சம்பவங்கள் பலவுண்டு.

பெண்ணியம் பேசுகின்ற
பெண்ணவளும் ஒருநாள்
கண்ணியத்தைக் கைவிட்டு
காதலிலே விழுகின்றார்

ஏமாறும் பெண்ணே!
ஏனிந்த நிலையுனக்கு
நீ மாறும் நிலைவேண்டி
நெஞ்சம் ஏங்குதம்மா!



# மாதமொரு கீதம்

*இம்மாதப் பாடசாலை*
*மட் / புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்.*

*இயற்றியவர்*
*கவிஞர் மூனாக்கானா (மு.கணபதிப்பிள்ளை)*

புவியினிலே எங்கள் கலைத்தாயகமே
புதுக்குடியிருப்பு வித்தியாலயமே.

ஆதியிலேயொரு கோடதை முறித்து
ஏடெழுதும் கரி முகவன்
அருகினில் கண்ணகை இவர்களின் அருளை
அவனியில் நாம் தினம் தினம் பெறுவோம்
அரும் பல கலைகளைப் பயில்வோம் - அவை
அறிந்ததன் படி வழி நடப்போம்
அன்னை பிதா குருவை மதிப்போம்

(புவியினிலே...)

உத்தம ஞானம் உயர்வுறு ஒழுக்கம்
உண்மைகள் அறிவதி லூக்கமும் காட்டி
சத்திய வாக்கும் தமிழ் மொழி அன்பும்
தலைநிமிர் வாழ்க்கையும் பெறுவோம்
நித்தியம் நேர்மையில் நடப்போம் - மனு
நீதியில் சமரசம் தொடுப்போம்
உத்தமராய் வழி நடப்போம்

(புவியினிலே...)


கலைகள் விஞ்ஞானம் கமத்தொழில் கைத்தொழில்
கணிதமும் சமயமும் அறிந்து
புனித நற்கரங்களைத் தொழிலினிற் பழக்கி
பொருள் வளம் பெருக்கியே உயர்வோம்
போதனை சாதனை பெறுவோம் - நாம்
புதுமையும் பழமையும் இணைப்போம்
புகழுடன் சேவைகள் புரிவோம்

(புவியினிலே...)

## மாணவரின் மனதிலிருந்து...

*மட்-புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்*

## நாற்காலி



நிமிடக் கணக்கில்
நிற்கின்ற போது
கால்களின் வேதனையை
வாங்கிக் கொண்டு
தன்னுடலையே அர்ப்பணித்த
அன்னை நாற்காலி

நோயாளிகளின் பாதி நோயை
வாங்கிக் கொண்ட வைத்தியரும்
வன்னமிகு நாற்காலி
இல்லார்க்கு உதவும்
பணத்தை எதிர்பாரா
பரிசுத் தொண்டன் நாற்காலி
மனிதர்களை முதலில்
வரவேற்க வந்த
வரவேற்புக் காரன்
நாற்காலி

நநவநீதரதி
தரம்-12

## கடல் தாய்

மங்கலங்கள் பொங்கிவரும்
இலங்கையிலே
மக்கள் நெஞ்சில் இன்பம்
பொங்கி வந்த வேளையிலே
அள்ளி மீன்கள் ஏந்திவந்தோம்
ஆழியிலே – இன்று
அல்லலுறும் காலம் கண்டோம்
ஊழிவினை
கண்டலினத் தாவரங்கள்
தென்னை பனை – இன்னும்
அழகிய கடலோரத்
தொன்னங்காற்றில் –அலை
கடல் நடுவே
நாங்களிருந்தோம் –பல
கடல் வள உயிரினங்கள்
கண்டு மகிழ்ந்தோம்.
கரையோர மண்ணகழ்வைத்
தடுத்திடுவோம் – கூடி
கரையோர மரங்களை நாம்
வளர்த்திடுவோம்
சுண்ணக் கற்கள் அள்ளுவதைத்
தடுத்திடுவோம் –சின்ன
கண்வலையை வீசுவதை
தடுத்திடுவோம்.
கடல்தொழில் செய்துவரும்
மீனவர்கள் –மக்கள்
உடலுள ஆரோக்கியக்
காவலர்கள்
மீன்பாடும் தேனாட்டில்
வாழ்பவர்கள் –எங்கள்
மீன்வளம் குன்றிடாமல்
பார்த்திடுங்கள்

*டே.ஷனோஜினி*
*தரம் -12*

அனைத்துத் தந்தையர்களுக்கும் கவிஞனின்

சர்வதேச தந்தையர்தின நல் வாழ்த்துக்கள்

(சர்வதேச தந்தையர் தினம் ஆனி 20)

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் நடாத்திய சர்வதேச இலக்கியப் போட்டியில் கலந்து கவிதைக்காக பரிசினைப் பெற்ற கின்னியா அமீர் அலி அவர்களுக்கு கவிஞன் தனது வாழ்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் மென்மேலும் கவிதைத் துறையில் பல சாதனைகளைப்புரிய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

—ஆசிரியர்—

## ஆவியின் அரிச்சுவடு

அன்பின் காதலிக்கு
ஆசையில் ஓர்கடிதம்
இன்பமுடன் வாழ்ந்திருக்கலாம்
ஈரநெஞ்சம் உனக்கென்றால்
உன்மேல் கொண்ட காதலினால்
ஊரவர்சொல் கேட்கவில்லை
என்னை நீயும் காதலித்தாய்
ஏதும் பேச மறுத்துவிட்டாய்
ஐந்தாறு வருடம் ஆன பின்னே
ஒருதலைக் காதலென்றாய்
ஓரிருநாள் கழியுமுன்னே
ஔவியமின்றி மடிந்துவிட்டாய்

அ.சிவாகரன்
புதுக்குடியிருப்பு

## அன்புள்ள அப்பா!

உன்னாலே உயிரானேன்
உலகறியப் பயிரானேன்
ஊமையாய் உனதன்பை
உணராமல் போனேனே?

களையாய் என் பிழைதீர
முளையாய் நீ வழியானாய்
கிளையாய் நான் புகழ்சூட
மழையாய் நீ கருவானாய்

எந்தையாய் உன்னை
எண்ணிய போதெல்லாம்
ஏமாந்து பேனேனே?
எந்தையும் தாயுமாய்
என்றுமே நீயாகும்
விந்தையும் காணாமல்!

அடர்ந்த உனதன்பின்
ஆழம் அறியாமல்
உன் - என் இடைத் தூரத்தை
முடிவிலியில் தொலைத்தேனே(ா)!

-கவிஞன்-

# ஏன் இந்தப் பிரமை

தெள்ளத் தெறிவான தென்றல்
என்னைத் தீண்டும் நேரம்
தேனே உனைத் தேர்ந்தெடுத்த
ஞாபகம் என் சிந்தைதனைச் சீண்டுதடி
விழியோரம் சிறிய நீர்த்திவலை
என் அடிமனதின் கவலைதனை
வெளிக்கொணர நினைக்கிறதே

உனைநினைத்து உள்வாங்கி
வெளிவிடும் போது
செல்லும் மூச்சுக் காற்றின் சூடும்
எங்கே என் குளிர்ந்த மலைநாட்டு
வாசம்
எனத் தேடத் துணிகிறதே.

நதிக் கரை ஓரத்திலே
நானிருந்து பார்க்கையிலே
புரண போடும் அலைகள்
நீ தரையிலே தவழ்ந்து தாவியதை
என் மனத்திரையில் ஒளிரவைக்கும்.

மலையோரம் வீசும் குளிர்காற்றுக் கூட
குறுகுறென்று உன்பெயரை
குறுக்கே கூறுதடி.

கோயில்ச் சடங்குதனில்
பெண்கள் கும்மி போடக்
கோணாமல்
நானிருந்து பார்க்கையிலே
பாடியாடும் பாவைதன்னில்
உன்முகம் தெரியுதடி

ஆடிய நங்கைதனை
நாடிநான் பார்க்கையிலே
பாடி அவள் போவெனவே
வாடி நான் மனந்தளர்ந்து
வந்திருந்தேன் வைகைக்கரையோரம்.

வைகையோ ஏன் வந்தாய்
உலகம் மிகப் பெரிது
அதை நீ அறிவாயோ
என்மீது விழுந்த வேலங்குச்சி
நீர்ச்சுழியில் தாழ்வதும் – பின்
மேலே எழுவதுமாய்
உன் வாழ்வதனை விளக்குகிறதே!

எவ்.புஎப்பா
நற்பட்டிமுனை
கல்முனை

# ந டி ப் பு ல க நா ட க ங் க ள்

குறுக்கும் நெடுக்குமான
வாழ்க்கைப் பாதையில்
குற்றுயிராக்கப்பட்ட நிலையில்
வளர்த்தப்பட்டுக் கிடக்கிறேன் நான்...

என்னுடன் நெருங்கிப் பழகி
நண்பர்கள் போல் நடித்து
நய வஞ்சகங்கள் புரிந்தவர்களால்
பேரானந்தம் பெருக்கெடுக்க
பாடை கட்டுகின்ற பணிகள்
நடந்துகொண்டிருக்கின்றன...

வீழ்த்தப்பட்டுக் கிடக்கும்
'பாவி' எனக்குப் பக்கத்தில்
தலைமாட்டிலே ஒரு கடிநாயும்
கால்மாட்டிலே ஒரு விசர் நாயுமாக
என்னைப் பதம் பார்ப்பதற்காகக்
காத்துக் கொண்டிருக்கின்றன...

இன்னம் சில நொடிகளில்
எனது உயிர் பிரியலாம்
எனது சடலத்தை
இந்த நாய்கள் இரண்டும் சேர்ந்து
குதறித் தின்னலாம்
குடலைக் கடித்து இழுத்துக்கொண்டு
குப்பையிலும் போடலாம்
ஆனாலும்~பாடை கட்டும்
நண்பர்களையும்
பக்கத்தில் இருக்கும் நாய்களையும்
நேசித்தபடியே நான்..
ஏனெனில் இந்த
நடிப்புலக உயிர்களெல்லாம்
எந்தன் தந்தையும் தாயும் போட்ட
சோற்றில் வளர்ந்த ஜீவன்களாச்சே.

திரு.சரவணமுத்து நவேந்திரன்
(கன்னிமுத்து வெல்லபதியான்)
170/B சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு-01
கல்முனை.

# அட்டைப்படக் கவிதை

ஆனி மாதம் 1 ம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச குழந்தைகள் தினத்திற்காய்ச் சமர்ப்பணமாகிறது இக் கவிதைத் துளிகள்

**பாலகனுக்குப் பட்டம்**

வாசற்படிகூட
ஏறமுடியாத வயதில்
உனக்கோர் பட்டம்
கல்லூரிப் படியேறிய எனக்கோ
கவலைதான் மிச்சம்

ந.தனுபவன்
11 A
தம்பிலுவில் ம.ம.வி
தம்பிலுவில்


பெற்றோர் பெற்ற பட்டம்
விளையாடும் பொம்மைக் கூட்டம்
பிள்ளை விரும்பும் பட்டம்
பறக்கும் காகிதப் பட்டம்

**செ. சத்திதாஸ்**
**புதுக்குடியிருப்பு**
**மட்டக்களப்பு**

நீ கல்விப் பட்டம் பெற்று
விளையாடுகிறாய்
நானோ...
விளையாடியதால்
காகிதப் பட்டம் விடுகிறேன்.

அப்துள் சலாம் முகமது மித்தார்
108, காட்டுப்பள்ளி வீதி
ஏறாவூர்

---



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்

# அகத்தில் அமர்ந்தவை

**அகத்தில் அமர்ந்தவை பகுதியினூடாக நீங்கள் இரசித்துப் படித்த கவிதை ஒன்றில் உங்களுக்குப் பிடித்த வரிகளை எழுதியனுப்பலாம். அனுப்பும் போது, அது எந்தக் கவிதைத்தொகுதி, இயற்றியவர், உங்களுக்கு பிடித்த காரணம் போன்ற விபரங்களையும் எழுதியனுப்புங்கள். இதன்மூலம் எமது "கவிஞன்" இரசிகர்களும் அதை முழுதாய் இரசிக்க முடியுமாயிருக்கும்.**

கவிதை :

ஒரு தூக்குக் கைதியின் கடைசி இரவு

இயற்றியவர் : கவிஞர் வைரமுத்து

இரசித்தவர் : சதாசிவம் மதன்

............
............
தன்னை ரசிக்கஆளில்லையென்றே
ஒவ்வோர் இரவும்
புல்லில் அழுதுவிட்டுப் போகின்றது.

................
பூமிக்குள் வேர்கள்
நீர்குடிக்கும் ஒலியும்
பிறைநிலா வளரும் மெல்லிய ஓசையும்
நிழல்கள் அசையும் நிசப்த சப்தமும்
இன்றுதான் கேட்கின்றேன் முதன் முதலாக.

.............
வாழ்வின் அருகே
சாவென்று வருத்தமில்லை
சாவின் அருகிலும்
வாழ்வென்று மகிழ்கிறேன்.
..........
.......
விடிவெள்ளியா அது?
இரவின் முற்றுப்புள்ளிகூட
எத்தனை அழகு!
ஏ வாழ்வே!
என் ஒவ்வொரு நாளும்
மரணத்தின் முதல் நாளாய்
வாய்திருக்கக் கூடாதா?

இக் கவிதை எழுதும் போது கவிஞரே ஒரு தூக்குக் கைதியாக இருந்து தனது கடைசி இரவை இரசித்தாரோ என எண்ணத்தோன்றுகின்றது.

பொருத்தமான தற்குறிப்பேற்றம் மூலம் பனித்துளியை வர்ணித்திருப்பது கவிஞரின் கவித்துவத்தைப் புலப் படுத்துகின்றது.

கற்பனைக்கெட்டாத ஓசைகளைக் கூடக் கேட்கவைத்திருக்கிறார் கவிஞர்.

இதுவரை இரவை இரசிக்காதவர்களையும் இதன் பின் இரவின் இரசிகர்களாக்கும் வல்லமை கவிஞரில் உள்ளதாய் இக் கவிதை கதை கூறுகின்றது.

விடிவெள்ளியைக் கொண்டு இரவுக்கு ஓர் அழகான முற்றுப்புள்ளியை இட்டிருக்கும் இடத்தில் கவிஞர் வாசகரைப் புல்லரிக்க வைத்துவிட்டு தான் கவிப்பேரரசராகியிருக்கிறாரோ?

# மேசைக் கிறுக்கள்



இப்பகுதி ஒரு வித்தியாசமானதாக அமையலாம். இதற்காக நாங்கள் கவிஞர்கள் உருவாக்கப்படும் ஆரம்ப இடமாகிய வகுப்பறை மேசை-களை நாடவேண்டியிருந்தது. அங்கு பெற்றுக்கொண்ட சில கிறுக்கல்களே இவை. சில மிகவும் உணர்புவூர்வமானவை. முகம்தெரியா கவிஞர்களின் முத்துச் செதுக்கல்கள் சில.........

பெண்ணே!
மலரிலும் முதன்மை நீ
முள்ளிலும் முழுமைநீ

நீ மனதை மூடிவைத்தால்
என்முகத்தில் தாடி வளரும்

நீ
யாரென்று தெரியாமல்
தொடங்கிய கதையில்
நான் யாரென்றே
தெரியாமல்ப் போய்விட்டது...

அன்று
அரசமரம் சுற்றிப்
பெற்றெடுத்த பிள்ளை
இன்று எவளையோ
சுற்றி வருகிறது
காதல் வரம் கேட்டு.

# நிறைமகள்

-வேதமூர்த்தி-

காளையோ கோவலன்
கட்டழகு கண்டு
வியந்தது வியப்பு

கண்ணகி கோவலன்
கூட்டலுக்கு
காலம்
பூவாகி
காயாகி பின் கனிந்தது.

வேளை சரியாக
ஓலை
உறவைத் தேடிப் பறந்தது.
கட்டிவைக்க – பின்
பாட்டிவைக்க

**கண்ணகி + கோவலன்**

இடி இடித்தது
மின்னல் மின்னியது
கடை செறிந்தது
குடை பரந்தது
மாலையில் மணி பதித்தபடி
வானம் கவிந்தது
மணநாள் பந்தலுக்குள்

(njhlUk;...)



# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

உங்கள் விமர்சனங்கள், கருத்துக்கள் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஒரு கலைஞனுக்கு விமர்சனங்கள் மிக முக்கியமான தூண்டுகோலாக அமைவதுடன் அவனைப் புடமிடுவதும் உங்களிடமிருந்து வரும் விமர்சனங்களே. உங்கள் வாழ்த்துக்கள் படைப்பாளிகளுக்காய் அமையட்டும். விமர்சனங்கள் கவிஞனுக்காய் மலரட்டும்.

கவிஞனே... நீ புதியவன்; எல்லோருக்கும்உரியவன்; இனிய நண்பன் எல்லாவற்றுக்கும் மேலாக கவிதைகளால் உலகைச் செதுக்க வந்த சிற்பி. வாழ்த்துக்கள் கோடி. அச்சு வாகனத்திலே 3 வது முறையாக ஏறி இப்போது நான்காவது முறையாகவும் வந்து கொண்டிருக்கிறாய். உன் உருவம் அழகானது; உள்ளடக்கம் மேலும் தரம் பெற வேண்டும். 'இலக்கணக் கவிஞன்' உனது சகோதரன் வேதமூர்த்தியின் 'நிறைமகள்' உனது சகோதரி.நாங்கள் எல்லோரும் உன்னோடு உறவாடும் உயர் தோழர்கள். ஓ.கே. வாய் ஒவ்வொரு திங்களும் ஒவ்வொரு வாசலுக்கும் வந்து போ. இல்லையென்றால் எங்களின் உயிர்மை உணர்வு பெறாது.

**-கன்னிமுத்து வெல்லபதியான்-**

உங்கள் முயற்சியைப் பாராட்டுகின்றேன். இங்கு வெளியாகும் சஞ்சிகைகளில் கவிதைக்கு மட்டும் உரிய இதழ் இது ஒன்றே என நினைக்கிறேன்.

(இதழ் மூன்றில்...)
தாசன் சுமன் அந்த மூன்று எழுத்தும் எவை என்று சொல்லவில்லை ~ சொல்லியிருக்கலாம்

வீட்டுக்குள் மீன் வெட்டுவார்களா என்று சுரேனிடம் கேட்கிறேன்.

திருமதி லோகேஸ்வரி ஒரு உண்மையைக் கூறியிருக்கிறார்.

அட்டைப்படக் கவிதையில் கயிலைநாதன் ஜெயகணேஸ் கேட்பது சரிதான்.

மரபுக் கவிதைகளுக்கும் இடம் கொடுப்பது நல்லது.


~கவிஞர் மூனாக்கானா~

---

## கவிதை நூல் அறிமுகம்


நூல் : என்னைத் தீயில் எறிந்தவள்
தொகுப்பு : அஷ்ரஃப் சிஹாப்தீன்
முகவரி : 37,ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை,மாபோளை, வத்தளை, இலங்கை.

வெளியீடு : யாத்ரா
முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2008
விலை : ரூ.200.00



VIDEO VISION

Video, Photo, Editing & Album designing



A.Inpan,
Tharichanam Road,
Nochimunai,
Batticaloa.

# - 077 9026947,0712109096, 065 3640568

**இதுவரை இலவச இதழாக மலர்ந்த கவிஞன்**

**இம்மாதம் முதல் ரூ. 20.00 ஆக**

**அறிமுகமாகிறது.**

மாதாந்தம் நீங்களும் கவிஞன் சஞ்சிகையினைப் பெற மற்றும் மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
077 36 20 328

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"கவிஞன்"
கூட்டுறவுக் கடை வீதி.
புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா).
மட்டக்களப்பு,
இலங்கை.